17.05.2016

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## மதுரையில் 15 மி.மீ மழை பதிவு

மதுரையில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேர நிலவரப்படி 15 மி.மீ அளவு மழை பதிவாகி உள்ளது.

கடந்த சில வாரங்களாக மதுரையில் வெப்பத்தின் அளவு 100 டிகிரியைத் தாண்டியிருந்தது. இந்நிலையில் கடந்த சில நாள்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு மழையும் பரவலாக பெய்தது. மதுரையில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பலத்த மழை பெய்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை முதல் திங்கள்கிழமை காலை வரை பெய்த மழை அளவு விபரம்(மில்லி மீட்டரில்):

மதுரை- 15, சாத்தையாறு- 15, மேட்டுப்பட்டி- 16, கள்ளந்திரி- 12.5, தனியாமங்கலம்- 12.5, விரகனூர்- 12.6, இடையபட்டி- 12.4, மேலூர்- 10, மேட்டுப்பட்டி- 16, புலிப்பட்டி- 10.5 என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது.

## ஆண்டிபட்டி பகுதியில் தக்காளி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

ஆண்டிபட்டி பகுதியில் தக்காளி விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி மற்றும் புள்ளிமான்கோம்பை, தெம்பம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஹைபிரிட் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. இவை குறுகிய காலத்தில் அதிக மகசூல் மற்றும் சேதம் அதிகம் இல்லாததால் இதனை விவசாயிகள் அதிகம் பயிரிட்டுள்ளனர்.

இந்நிலையில் போதிய மழை இல்லாததால் இவை வளர்ச்சி அடையாமல் மகசூல் குறைந்துள்ளது. மேலும் இப்பகுதிகளில் தொடர்ச்சியாக கடந்த 4 நாள்களாக மழை பெய்ததால் தக்காளி செடிகள் அழுகி விட்டன.

இதனால் தக்காளி வரத்து குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது. தற்போது கிலோ ரூ.50 முதல் ரூ.55 வரை விற்பனையாகிறது. இன்னும் ரூ.60-க்கு மேல் விலை உயர வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பரமத்தி வேலூர் சந்தையில் வெற்றிலை விலை உயர்வு

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலை விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

பரமத்தி வேலூர் சுற்றுப் பகுதி கிராமங்களான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்துள்ளனர்.

இங்கு விளையும் வெற்றிலை கர்நாடகம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம் பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.6 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று .2 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.8 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. வெற்றிலையின் வரத்துக் குறைந்ததால்

விலை உயர்ந்ததாக விவசாயிககள் தெரிவித்தனர். விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் தேவைக்கு தண்ணீர் திறப்பு நொடிக்கு 500 கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து கடந்த சில தினங்களாக நொடிக்கு 1,500 கன அடி வீதம் குடிநீருக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இது சனிக்கிழமை மாலை முதல் நொடிக்கு 500 கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47.76 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 72 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 16.67 டி.எம்.சி.யாக இருந்தது.

## கரூர் மாவட்டத்தில் பரவலாக மழை: தோகைமலையில் 61 மி.மீ. மழை

கரூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை வரை பரவலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக தோகைமலையில் 61. மி.மீ. மழையும், குறைந்தபட்சமாக மாயனூரில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை காலை வரை பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): அரவக்குறிச்சி -21, க.பரமத்தி -11.40, குளித்தலை-19.90,மாயனூர் -10, கரூர் -13, அணைப்பாளையம்-31, தோகைமலை- 61, பஞ்சப்பட்டி- 32, பாவிடுதி- 12.20, கடவூர்- 18.20, கிருஷ்ணராயபுரம்- 19 என மொத்தம் 270.70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

## திருவாரூரில் 76 மில்லி மீட்டர் மழை

திருவாரூரில் திங்கள்கிழமை 76 மில்லி மீட்டர் மழை பதிவானது.
திருவாரூரில் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டு லேசான மழைத் தூரலாகத் தொடங்கி பெருமழையாகப் பெய்யத் தொடங்கியது. இதனால் இதுவரை வெயிலில் தவித்த மக்கள் குளிர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். இ௫ருப்பினும் திங்கள்கிழமை காலை வரை தொடர்ந்து மழை பெய்ததால் பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவுக்குகூட போக முடியாமல் அவதிப்பட்டனர் மக்கள். இதுமட்டுமன்றி மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதித்தது.
திருவாரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு:

திருவாரூர் - 76.50, குடவாசல் - 65.80, நீடாமங்கலம் - 64.20, திருத்துறைப்பூண்டி - 60, முத்துப்பேட்டை - 58, நன்னிலம் - 53.40, மன்னார்குடி - 52.60 என்ற அளவில் மழை பதிவானது.

## கோடை மழையைப் பயன்படுத்தி இடைஉழவு: தோட்டக்கலைத் துறை

திருநெல்வேலி மாவட்டத்தில் கோடை மழையைப் பயன்படுத்தி இடைஉழவு மேற்கொள்ள, தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

மாவட்டத்தில் 2 மாதங்களாக கடும் வெயில் நிலவி வந்தநிலையில், சில நாள்களாக கோடைமழை பெய்து வருகிறது. இம்மழையை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள, வேளாண் துறை வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

கோடை மழையைப் பயன்படுத்தி பழமரத் தோப்புகளில் இடைஉழவு மேற்கொள்வதன் மூலம் பல்வேறு நன்மைகளை விவசாயிகள் பெற முடியும். மழைநீர் வழிந்தோடி வீணாகாமல் தடுத்து மண்ணுக்குள் இறக்கி மழைநீரைச் சேமிக்க உதவும்.

இதற்கு ஏதுவாக நாம் சரிவுக்கு குறுக்காக உழவு மேற்கொள்ள வேண்டும். மண் நன்கு பொலபொலப்பாகி மண்ணின் தன்மை

மேம்படுகிறது. இடைஉழவு மூலம் களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. களைகள் பூத்து விதைகள் பரவும் முன்பே கோடையில் அழிக்கப்படுவதால் பருவகாலத்தில் களைகளின் தாக்கம் வெகுவாகக் குறையும்.

பல்வேறு பூச்சிகள், நோய்க் கிருமிகளுக்கு களைகளே மாற்று உணவாகவும், மாற்று இருப்பிடமாகவும் உள்ளதால் பூச்சிநோய்த் தாக்குதலும் வெகுவாகக் குறையும். மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள், கூட்டுப் புழுக்கள், நோய்க் கிருமிகள் கோடை உழவால் வெளிப்படுத்தப்பட்டு அழிக்கப்படுவதால் அதனாலும் பூச்சிநோய்த் தாக்குதல் வெகுவாகக் குறையும்.

எனவே, கோடை மழையைப் பயன்படுத்திப் பழமரச் சாகுபடியாளர்கள் பழமரத் தோப்புகளில் இடைஉழவாகவும், இதர சாகுபடியாளர்கள் கோடை உழவாகவும் உழுது பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மா, பலா விவசாயிகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை: ராமலிங்க ரெட்டி

மா, பலா விவசாயிகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என கர்நாடக போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி தெரிவித்தார்.

பெங்களூரில் திங்கள்கிழமை ஹாப்காம்ஸ் சார்பில் மா, பலா சிறப்பு விற்பனையைத் தொடக்கி வைத்து அவர் பேசியது: சர்வதேச அளவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் 600 வகையான மாம்பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. இந்தியாவில் 15 வகையான மாம்பழங்கள் மட்டுமே விளைவிக்கப்படுகின்றன. கர்நாடகத்தில் கோலார் மாவட்டம் சீனிவாசபுரா மாம்பழ விளைச்சலுக்குப் பெயர் பெற்றுள்ளது. இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகளிடமிருந்து நேரடியாக மா, பலா பழங்களை வாங்கி விற்பனை செய்யும் பணியினை ஹாப்காம்ஸ் செய்து வருகிறது. இது வரவேற்கத்தகது. கடந்த ஆண்டு கர்நாடகத்தில் ஹாப்காம்ஸ் மூலம் 577 டன் மாம்பழமும், 70 டன் பலாப்பழமும்

விற்பனை செய்யப்பட்டுள்ளன. நிகழாண்டில் 1 ஆயிரம் டன் மாம்பழமும், 200 டன் பலாப்பழமும் விற்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு விவசாயிகளின் நலனுக்குத் தேவையான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக மா, பலா விவசாயிகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதை விவசாயிகள் பெற்று பலனடைய வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் ஹாப்காம்ஸ் தலைவர் ஜே.ஆர்.சீனிவாசன், மேலாண் இயக்குநர் பெல்லூர் கிருஷ்ணா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மரங்களின் அரசியல்**

'ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி' எனவாழ்த்துகிறோம். ஆனால் ஆலமரம் எப்போதும் பிற மரங்கள் மீது கன்றாக வளரும். ஓரளவு வளர்ந்த பின்புவேர்களைத் தரைக்கு அனுப்பி தன்னிச்சையாக வளரும்.நன்கு வளர்ந்த பின்பு எந்த மரத்தின் மீதுவளர்ந்ததோ அந்த மரத்தையே இறுக்கி சத்திழக்கச் செய்யும்.நாளடைவில் கொன்றுவிடக் கூடியது. பெரும்பாலும் பனைமரம், வேப்ப மரத்துடன் தான் இவை இணைந்துகாணப்படுகின்றன. அதைப்போல அரசமரமும் பிற மரங்கள் மீது ஒட்டுண்ணியாக வளரும் தன்மையைப் பெற்றுள்ளது.

## தேயிலை ஏலத்தில் 95 சதவீத விற்பனை

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏலத்தில், 95 சதவீதம் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 19க்காக நடந்த ஏலத்தில், எட்டு லட்சம் கிலோ தேயிலை துாள் இடம் பெற்றது. இதில், இலை ரகம்,5 லட்சத்து 4 ஆயிரம் கிலோவும்; டஸ்ட் ரகம், 2 லட்சத்து, 96

ஆயிரம் கிலோவும் இருந்தது. 95 சதவீதம் விற்பனையானது. சி.டி.சி., ரகத்தில், உயர்ந்தபட்ச விலையாக, தேயிலை துாள் கிலோ, 278 ரூபாய்; ஆர்தோடெக்ஸ் ரகத்துக்கு, 255 ரூபாய் கிடைத்தது.

சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை, 79 ரூபாய் முதல், 82 ரூபாய் வரையிலும்; தரமான தேயிலை துாள், 132 ரூபாயில் இருந்து, 135 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை, 93 ரூபாயில் இருந்து, 95 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 160 ரூபாய் வரையிலும் ஏலம் விடப்பட்டது.

**மழை தொடர்வதால் விவசாயிகள் ஆறுதல்**

மஞ்சூர் : மஞ்சூரில் பெய்த மழையால் விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர்.

நடப்பாண்டு துவக்கத்திலிருந்து கோடை வெயில் தாக்கம் அதிகரித்ததால், கடும் வறட்சி யால் புல்வெளிகள் காய்ந்து, கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபட முடியவில்லை. தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி அதிகளவில் படர்ந்து, மகசூல் வெகுவாக குறைந்தது.

மழை வேண்டி மஞ்சூர் பகுதி கிராமங்கள் தோறும் சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. இந்நிலையில், கடந்த வாரத்தில் இரண்டு நாட்கள் மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு, அரை மணி நேரம் கன மழை நீடித்தது.

இந்த மழையால், மலை காய்கறி, தேயிலை செடிகளுக்கு ஓரளவு ஈரப்பதம் கிடைப்பதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்த மழை விவசாயிகளுக்கு ஆறுதல் ஏற்படுத்தியுள்ளது.-----

## ஆப்பிள் விலை அதிகம் மாம்பழம் விலை குறைவு

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து குறைவால் ஆப்பிள் விலை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் ஓரளவுக்கு ஆப்பிள் பயிரிடப்பட்டு சாகுபடி

செய்யப்படுகிறது. திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு காஷ்மீரிலிருந்து 2 நாட்களுக்கு ஒரு முறை 5 டன் ஆப்பிள் வீதம் விற்பனைக்கு வரும்.

தற்போது காஷ்மீரில் சீசன் முடிந்து விட்டதால் வரத்து குறைந்து, ஆப்பிள் கிலோவுக்கு ரூ.80 வரை விலை அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.70, ரூ.80 க்கு விற்ற ஆப்பிள், நேற்று ரூ.160 க்கு விற்றது. அதே சமயம், பங்கன பள்ளி, செந்துாரம், மல்கோவா, கிளி மூக்கு உள்ளிட்ட மாம்பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை கணிசமாக குறைந்துள்ளது. ஒரு கிலோ மாம்பழம் ரூ.30 முதல் ரூ.50 க்கும் விற்றது.

## திண்டுக்கல்லில் 2ம் கட்டமாக மண்வள அட்டை வழங்க திட்டம்

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் எல்லா விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்க, மண் மாதிரிகள் ஆய்வு செய்யும் பணிகள் வேகமாக நடந்து வருகிறது.

நாடு முழுவதும் தேசிய மண்வள அட்டை இயக்கம் செயல்பட்டு வருகிறது. மண்வளம் அறிதல், மண்ணில் உள்ள சத்துக்களின் விவரங்களை அட்டவணைப்படுத்தி, என்ன பயிர் வகைகள் விளைவிக்கலாம் என்பதை குறிக்கும் மண் வள அட்டை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதன் மூலம் மண்ணின் தன்மையை அறிந்து விவசாயிகள் நிலத்திற்கு ஏற்ற சத்துடைய உரங்களை இடலாம்.

மண் மாதிரிகளை ஆய்வு செய்து அதன் தன்மையை ஜி.பி.எஸ்., மூலம் எல்லோரும் அறிந்து கொள்ள கணினியில் பதிவு செய்ய உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல்லில் கடந்த ஆண்டு நீர் மற்றும் நீரற்ற நிலபரப்பு என

பல்வேறு இடங்களில் மண் மாதிரி பரிசோதனை செய்யப்பட்டு, 10 ஆயிரத்து 540 மண்மாதிரி சோதனை செய்யப்பட்டு மண்வள அட்டை வழங்கப்பட்டது.

இந்நிலையில் 2ம் கட்ட மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, எல்லா விவசாயிகளுக்கும் மண் வள அட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## கொட்டி தீர்த்தது கோடை மழை: மாவட்டத்தில் 270 மி.மீ., பதிவு

கரூர்: மாவட்டம் முழுவதும் கொட்டி தீர்த்த மழையால், ஒரே நாளில், 270.70 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. தமிழகத்தில், கத்திரி வெயில் துவங்கி நிலையில், கரூர் மாவட்டத்தில் வெயில் வாட்டி வதைத்து வந்தது. இருப்பினும், இரவு நேரங்களில் அவ்வப்போது சாரல் மழை பொழிந்து வந்தது. இந்நிலையில் நேற்று, காலை, 7 மணி முதல் மாவட்ட முழுவதும் பரவலாக மழை பெய்தது. தேர்தல் முன்னிட்டு அனைத்து வணிக நிறுவனங்கள் விடுமுறை அளித்தாலும், தொடர்ந்து மழையாலும் பஸ் ஸ்டாண்ட், மனோகரா கார்னர், ஜவகர் பஜார் உட்பட அனைத்து பகுதிகளில் வெறிச்சோடி கிடந்தது. ஆனாலும், வாக்காளர்கள் குடை பிடித்து கொண்டு ஓட்டுச்சாவடிகளுக்கு சென்று, தங்கள் ஜனநாயக கடை ஆற்றினர். அரசியல் கட்சி சேர்ந்தவர்கள், மழையால் ஓட்டுச்சாவடி அருகில் சாமினா பந்தல் அமைந்த இடத்தில் நின்று கொண்டு ஓட்டு சேகரித்தனர்.

பல்வேறு பகுதிகளில் பெய்த மழை அளவு: அரவக்குறிச்சி, 21 மி.மீ., க.பரமத்தி, 11.40 மி.மீ., குளித்தலை, 19.90 மி.மீ., மாயனூர், 10 மி.மீ., கரூர், 13 மி.மீ., அணைபாளையம், 31 மி.மீ., தோகைமலை, 61 மி.மீ., பஞ்சப்பட்டி 32 மி.மீ., பாலவிடுதி, 12.20 மி.மீ., கடவூர், 18.20 மீ.மி.,

கிருஷ்ணராயபுரம், 19 மி.மீ., மயிலம்பட்டி, 22 என, மொத்தம், 270.70 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## கொத்தமல்லி தலை சாகுபடியில் விவசாயிகள்

பெரியகுளம்: மாவட்டத்தில் பெரியகுளம், சின்னமனுார், குச்சனுார், எரச்சங்கநாயக்கனுார், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில், கிணற்றுப்பாசனத்தில் கொத்த மல்லிதலை சாகுபடி செய்யப்படுகிறது. கோடைமழையால் கிணற்றில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதனால் கிணற்று பாசனத்தில் மல்லித்தலை விவசாயம் களை கட்டியுள்ளது. ஒரு ஏக்கரில் மண்ணை கிளறி, பாத்தி அமைத்து, ஒரு கிலோ மல்லி விதை வாங்கி நடவேண்டும். 50 நாட்களில் மல்லிதலைலையை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கருக்கு ஏழு டன் முதல் 8 டன் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு நிர்வாகச்செலவு 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை செலவாகும். ஒரு லட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும்.

ருசியுடன், மருத்துவத்தன்மையுடன் கொண்ட மல்லிதலை உணவுப்பொருட்களில் முக்கிய இடம் வகிக்கிறது.

வைகாசி மாதம் அதிக எண்ணிக்கையில் திருமண முகூர்த்தம் நடப்பதால் மல்லிதலைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. அறுவடையாகும் மல்லிதலை திருநெல்வேலி, மதுரை உள்ளிட்ட வெளியூர் மார்க்கெட்டுகளுக்கும், தேனி மாவட்டங்களில் கறிவேப்பிலை கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. வியாபாரிகள் தோட்டத்தில் ஒரு கிலோ ரூ.30 முதல் 50 வரை வாங்கி செல்கின்றனர். மாவட்டத்தில் பரவலாக மல்லிதலை விவசாயம் களை கட்டியுள்ளது.

## தீர்த்தாண்டதானத்தில் 41 மி.மீ, மழை பொழிவு

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகளவாக தீர்த்தாண்டதானத்தில் 41 மி.மீ., மழை பெய்துள்ளது.
வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

கடலோர பகுதிகளில் கனமழை பெய்துள்ளது. விளை நிலங்கள், தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கியது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் தீர்த்தாண்டதானத்தில் அதிகபட்சமாக 41 மி.மீ., மழை பெய்துள்ளது. இதர பகுதிகளில் மழை பொழிவு( மில்லி மீட்டரில்)

ராமேஸ்வரம்-28.20, வட்டாணம்-28, ராமநாதபுரம்-21.2, தொண்டி-19.70, தங்கச்சிமடம்-15.20, பரமக்குடி-19, பாம்பன்-14.2, பள்ளமோர்குளம்-11, வாலிநோக்கம் 8.8, ஆர்.எஸ்.மங்கலம்-8.4, கமுதி-7.60, கடலாடி-3.2, திருவாடானை-2, சராசரி 14.24, மொத்தம் 227.90.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மழை பெய்யாத நிலையிலும் குஜராத்தில் 2 ஆண்டில் விளைச்சல் அதிகரிப்பு




புதுடெல்லி: தொடர்ந்து 2 ஆண்டுகளாக போதுமான மழை பெய்யாத நிலையிலும் குஜராத்தில் 95 சதவீதம் அளவுக்கு பயிர் விளைச்சல்

அதிகரித்துள்ளது.வறட்சி பாதித்த மாநில முதல்வர்களை, பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசி வருகிறார். இந்த வகையில், நேற்று பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில், குஜராத் முதல்வர் ஆனந்தி பென் படேல் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் வறட்சி பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகள், குடிநீர் பற்றாக்குறையை போக்குவது உள்ளிட்டவை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் முதல்வர் பேசுகையில், 'குஜராத்தில் கடந்த 2 ஆண்டுகளாக போதுமான அளவு மழை இல்லாதபோதும், விளைச்சல் 95 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு மாநில அரசு எடுத்த நடவடிக்கைகளே காரணம் என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் குஜராத்தில் மீன்வளம், முத்துசிப்பி வளர்ப்பு, தேன் உற்பத்தி, கடற்பாசி உற்பத்தி உள்ளிட்டவற்றை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூட்டத்தில் பங்கேற்ற முதல்வர் ஆனந்தி பென் படேல் குஜராத்தில் நிலவும் வறட்சியை போக்க மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்கினார். வறட்சி பாதிப்பை மத்திய, மாநில அரசுகள் இணைந்து சரி செய்ய வேண்டும் என்று பிரதமர் வலியுறத்தினார் என்று கூறப்பட்டுள்ளது.

## திண்டிவனத்தில் மழை

மயிலம், : கோடை காலத்தின் உச்சமான கத்திரி வெயில் தற்போது வாட்டி வதைத்து வருகிறது. திண்டிவனம் பகுதியிலும் வெயில் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் பகலில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. இரவிலும் தூங்க முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், நேற்று நள்ளிரவு முதல் திண்டிவனம் ஜக்காம்பேட்டை பகுதிகளில் திடீரென மழை பெய்தது. அரை மணி நேரம் மழை நீடித்தது. மழையை தொடர்ந்து காலை வரையில் குளிர்ந்த காற்று வீசியது. வெயிலால் அவதிப்பட்டு வந்த மக்கள் மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இடைப்பாடி அருகே 300 மூட்டை பருத்தி ரூ.4 லட்சத்திற்கு ஏலம்

இடைப்பாடி, : இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் செயல்படும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். நேற்று நடைபெற்ற ஏலத்திற்கு மேட்டூர், தாரமங்கலம், இடைப்பாடி, பூலாம்பட்டி, ஓமலூர், தர்மபுரி, நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். பின்னர், நடைபெற்ற ஏலத்தில் பிடி ரகம் குவிண்டால் ரூ.4850 முதல் ரூ.5310 வரையிலும், டிசிஹெச் ரகம் குவிண்டால் ரூ.5650 முதல் ரூ.6000 வரையிலும் விற்பனையானது. ஆக மொத்தம் 300 மூட்டை பருத்தி ரூ.4 லட்சத்திற்கு ஏலம் போனது. இதே போல், எள் விற்பனையும் நடைபெற்றது. இதில், 30 மூட்டை வெள்ளை எள் ரூ.2 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

## விளைச்சல் பாதிப்பால் காய்கறி விலை 80சதவீதம் உயர்வு வரத்து வெகுவாக குறைந்தது

சேலம், : தமிழகத்தில் விளைச்சல் பாதிப்பால் அனைத்து காய்கறிகளும் விலை 80 முதல் நூறு சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் கடந்தாண்டு பெய்த மழையால் நவம்பர் முதல் மார்ச் வரை காய்கறிகளின் விளைச்சல் அமோகமாக இருந்தது. இதனால் அனைத்து காய்கறிகளின் விலையும் சரிந்தது. தக்காளி, கத்திரிக்காய் ரூ.10 வரை விலை குறைந்தது. இந்நிலையில் நான்கு மாதமாக மழை இல்லாததாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போனதால் காய்கறிகளின் விளைச்சல் பாதியாக சரிந்துள்ளது.

இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு 50 சதவீதம் மட்டுமே காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. கடந்த மார்ச் மாதத்தை காட்டிலும் நடப்பு மாதத்தில் பெரிய வெங்காயத்தை தவிர மற்ற அனைத்து காய்கறிகளும் 80 முதல் நூறு சதவீதம் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சேலம் காய்கறி வியாபாரிகள் கூறியதாவது: கடந்த இரு மாதாக வெயில் காரணமாகவும், மழை இல்லாததாலும் காய்கறிகளின் விளைச்சல் குறைந்துள்ளது. சேலம் ஆனந்தா காய்கறி மார்க்கெட், வ.உ.சி., மார்க்கெட்டுக்கு தினசரி 200 முதல் 250 டன் காய்கறிகள் விற்பனைக்கு வரும். விளைச்சல் பாதிப்பால் தற்போது 100 முதல் 120 டன் மட்டுமே விற்பனைக்கு வருகின்றன. மேலும் முகூர்த்தம் காரணமாக காய்கறிகளின் தேவையும் அதிகரித்துள்ளது. இதனால் அனைத்து காய்கறிகளின் விலையும் 80 முதல் நூறு சதவீதம் விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் விளையும் காய்கறிகளை கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநில வியாபாரிகள் நேரிடையாக வந்து கொள்முதல் செய்கின்றனர். தமிழகத்தைவிட வெளி மாநில வியாபாரிகள் காய்கறிகளுக்கு அதிக விலை கொடுப்பதால், விவசாயிகள் வெளி மாநிலங்களுக்கு அதிகளவில் காய்கறிகளை அனுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் மழை பெய்துள்ளது. இம்மழையால் காய்ந்த கிடந்த நிலத்தில் ஓரளவிற்கு ஈரப்பதம் வந்துள்ளது. எதிர்வரும் நாளில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் அடுத்த மாதத்தில் காய்கறிகள் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. வரும் ஜுலை மாதம் வரை இதே விலையில் தான் காய்கறிகள் விற்பனை இருக்கும். இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

## ராசிபுரத்தில் கொட்டி தீர்த்த மழை

ராசிபுரம் : ராசிபுரத்தில் நேற்று கனமழை பெய்தது. இதனால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் அக்னி நட்சத்திரம் துவங்கிய நாள் முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதேபோல், நேற்று காலை 9 மணிக்கு சாரல் மழை பெய்யத் தொடங்கியது. நேரம் செல்ல செல்ல மழை அதிகரித்தது.

சுமார் ஒரு மணி நேரம் கனமழை பெய்தது. இதனால் புதுப்பாளையம்

சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர். தாழ்வான பகுதியில் மழை நீர் குளம் போல் தேங்கியது. மேலும், தாழ்வான பகுதியில் உள்ள வீடுகளிலும் மழை நீர் புகுந்தது.

இதனால் மக்கள் பெரும் அவதிப்பட்டனர். சுமார் 3 மணி நேரத்துக்கு பிறகு தண்ணீர் வடிந்தது. ராசிபுரத்தில் நேற்று இடைவிடாது சுமார் 4 மணி நேரத்துக்கு மேல் மழை பெய்ததால், வாக்களிக்க வந்த மக்கள் பெருக்க சிரமத்துக்கு ஆளாகினர். ஆனாலும், மழையை பொருட்படுத்தாமல் மக்கள் குடைபிடித்தபடி வந்து தங்களது ஜனநாயக கடமையை ஆற்றிச் சென்றனர்.

## நாள் முழுவதும் தொடர்ந்த மழை தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியில், இந்த ஆண்டு துவக்கத்திலிருந்து வெயிலின் தாக்கம் அதிகரித்து, மழைப் பொழிவு இல்லாமல் இருந்தது. இதில் ஒரு மாதத்திற்கு முன்பும், சில நாட்களுக்கு முன்பும் அவ்வப்போது சில மணிநேரம் மழை பொழிந்தது. நேற்று முன்தினம் மதியம் முதல் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. ஒரு சில இடங்களில் லேசான சாரல் மழையுடன் நின்றுபோனது. இந் நிலையில், நேற்று காலை சுமார் 6.30 மணியளவில் சாரலுடன் துவங்கிய மழை, நேரம் செல்ல செல்ல அதிகரிக்க துவங்கியது.

பொள்ளாச்சி நகர் மட்டுமின்றி ஆனைமலை, வேட்டைக்காரன் புதூர், சேத்துமடை, கோட்டூர், ஆழியார் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளிலும் தொடர்ந்து பல மணி நேரம் இடைவிடாமல் மழை பொழிந்தது. இதனால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து தென்னை விவசாயிகள் கூறுகையில், ஆண்டுதோறும் கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து தென்னைகளை காப்பாற்ற பெரும் முயற்சி மேற்கொள்வோம்.

அந்த நேரங்களில், போதுமான தண்ணீர் கிடைக்காததால் சொட்டு நீர்ப் பாசனம் உள்ளிட்ட முறைகளை பின்பற்றி தண்ணீர் பாய்ச்சுவோம். இந்த

ஆண்டு துவக்கத்திலிருந்து வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் தென்னை மரங்களின் நிலை என்னவாகுமோ என எண்ணியிருந்தோம். ஆனால், தற்போது கோடை மழை பெய்துள்ளது ஆறுதலை கொடுத்துள்ளது. இந்த மழை தொடர்ந்தால் தென்னை மரங்களை முழுமையாக காப்பாற்றி விடலாம் என்றனர்.

## புதுகையில் வெளுத்துகட்டிய கோடை மழை

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் நேற்று மீண்டும் வெளுத்து கட்டிய கோடை மழையால் மக்களை வாட்டி வதைத்த வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அக்னி நட்சத்திரம் ஆரம்பிக்கும் முன்பே புதுக்கோட்டை மாவட்டத்தில் கோடை போல் வெயில் கொளுத்தி வந்தது. இதனிடையே கடந்த 4ம் தேதி முதல் கத்தரி வெயில் துவங்கியதால் இதன் தாக்கம் மேலும் அதிகரித்தது.

நூறு டிகிரிக்கு மேலாக வாட்டி வறுத்தியதால் சாலைகளில் பகலில் மக்கள் நடமாட்டம் குறைந்தது. இரவிலும் புழுக்கம் தொடர்ந்ததால் ஏராளமான மக்கள் தங்களது நிம்மதியான தூக்கத்தை இழந்தனர். இதனால் சாலையோர கடைகளில் தர்ப்பூசணி, நுங்கு, இளநீர் விற்பனை களை கட்டியது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. கடந்த 2 தினங்களுக்கு முன்னர் பெய்த கோடை மழையால் பூமியை வாட்டி வதைத்த வெப்பம் தணிந்தது. இந்நிலையில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் மப்பும், மந்தாரமுமாகவே இருந்தது. பின்னர் காலை 10 மணிக்கு மனதுக்கு இதமளிக்கும் குளுகுளு தென்றல் காற்றுடன் மழை பெய்யத் துவங்கியது.

சுமார் அரை மணி நேரத்துக்கு மேலாக வெளுத்து கட்டிய மழையால் சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. அதே வேளையில் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. புதுக்கோட்டை பொது அலுவலக வளாகம், தற்காலிக பஸ் நிலையம் போன்ற தாழ்வான பகுதிகளில் மழை நீர் ஆங்காங்கே குளம் போல் தேங்கி நின்றது. இதே

போல், சாலை மற்றும் சாலையோர பள்ளங்களில் மழைநீர் தேங்கி நின்றதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர்.

இருப்பினும், கோடையால் நிலவி வந்த அனலுக்கு குளிர்ச்சி அளிக்கும் வகையில் நேற்று பெய்த மழையை விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.இதே போல், அறந்தாங்கி, பொன்னமராவதி, மணமேல்குடி, திருமயம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடனேயே காணப்பட்டது. பின்னர் மாலை 4 மணி முதல் பெய்யத் துவங்கிய மழை சுமார் 2 மணி நேரத்துக்கு மேலாக வெளுத்துக் கட்டியது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. அதே வேளையில் கறம்பக்குடி, இலுப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் குளு குளு தென்றல் காற்றுடன் சாரலாகவும், தூறலாகவும் மழை பெய்தது. இதனால் மண் மட்டுமல்ல மக்களின் மனமும் குளிர்ந்தது.

வருண பகவான் கருணை தொடருமா?

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொளுத்தி வந்த வெயிலால் அனைத்து நீர்நிலைகளும் வறண்டுக் கிடக்கின்றன. இதனால் பாசன வசதியும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, குளம், ஏரி, கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரிக்க ஏதுவாக இதுபோன்று அவ்வப்போது மழை பெய்ய வருண பகவான் கருணை புரிவாரா? என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் தயார் செய்யும் முறை வேளாண் இணை இயக்குனர் விளக்கம்

சேதுபாவாசத்திரம், : ஒற்றை நாற்று நடவு முறைக்கு நாற்றங்கால் தயார் செய்யும் முறை குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சாந்தி விளக்கமளித்துள்ளார்.நடப்பு ஆண்டு கோடை பருவ சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி முறையை கையாள வேண்டும். திருந்திய நெல் சாகுபடிக்கு 14 நாட்களில் வாளிப்பான நாற்றுகளை பெற திருத்தி அமைக்கப்பட்ட பாய்

நாற்றங்கால் முறையை பயன்படுத்த வேண்டும். வடிகால் வசதியுடன் நீர் ஆதாரத்துக்கு அருகாமையில் நாற்றங்கால் அமைய வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய தேவையான 3 கிலோ விதையை நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

ஒரு மீட்டர் அகலமும் 40 மீட்டர் வரை நீளமும், 5 செமீ உயரமும் கொண்ட மேட்டு பாத்திகள் அமைத்து அதன் மேல் பாலித்தீன் உர சாக்குகளை விரிக்க வேண்டும். மரக்கால் ஆன விதைப்பு சட்டம் தயார் செய்து அதனை பாலித்தீன் விரிப்பு மேல் சரியாக சமன்பட வைக்க வேண்டும். 1 கிலோ வளமான வயல் மண்ணுடன் 1/2 கிலோ நன்கு தூள் செய்யப்பட்ட டிஏபி உரத்தை சேர்த்து விதைப்பு சட்டத்திற்குள் 3/4 அளவிற்கு நிரப்ப வேண்டும். அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவுடன் விதை நேர்த்தி செய்யப்பட்ட 3 கிலோ முளை கட்டிய விதையை 0.5 சதுர மீட்டர் சட்டத்திற்குள் 45 கிராம் என்ற அளவில் விதைத்து பின் மண்ணால் நன்கு மூடிவிட வேண்டும்.

பின்னர் அடிவரை நனையும் அளவிற்கு தண்ணீர் தெளித்து சட்டத்தை வெளியில் எடுக்க வேண்டும். விதை விதைத்த பின் தென்னை ஓலை அல்லது வைக்கோலை கொண்டு மூடி விட்டு 8 நாள் கழித்து அகற்றி விட வேண்டும். பின்னர் 5 நாட்கள் வரை பூவாளியால் தண்ணீர் தெளித்த பின்னர் பாத்திகள் நனையும் வகையில் தண்ணீர் கட்ட வேண்டும். விதைத்த 9ம் நாள் 0.5 சதம் யூரியா கரைசல் (150கிராம் யூரியாவிற்கு 30லிட்டர் தண்ணீர் என்ற வீகிதத்தில்) தெளிக்க வேண்டும்.

14வது நாளில் சிறிய சதுர சட்டத்திற்குள் உள்ள 12 முதல் 16 செமீ உயரம் உடைய 2 இலை கொண்ட இளம் நாற்றுகளை வேர் அறுபடாமல் எடுத்து குத்துக்கு 1 நாற்றாக வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு 22.5 செமீ இடைவெளியில் சதுர மீட்டருக்கு 20 குத்துக்கள் இருக்குமாறு சதுர முறையில் நடவு செய்ய வேண்டும் என்று வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

தஞ்சை, : தஞ்சை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்தில் 2 நாள் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி நடைபெற உள்ளது.தஞ்சை- திருச்சி தேசிய நெஞ்சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கறவை மாடு வளர்ப்பு குறித்து 2 நாள் பயிற்சி வழங்கப்பட உள்ளது.வருகிற 17, 18ம் தேதிகளில் காலை 9 மணி முதல் நடைபெறும் இப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டு வர வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு பேராசிரியர், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சை என்ற முகவரியிலோ அல்லது 04362-204009 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காரைக்குடியில் 63 மி.மீ மாவட்டம் முழுவதும் பரவலாக மழை

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. கோடை காலத்தில் முன்கூட்டியே மழை பெய்து வருவதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த 2011, 2012, 2013ம் ஆண்டுகளில் மாவட்டம் முழுவதும் போதிய மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. கடந்த 2014, 2015ம் ஆண்டுகளில் கோடை காலத்தில் ஓரளவு மழை பெய்ததால் மாவட்டத்தின் சில பகுதிகளில் விவசாயம், குடிநீர் தேவைகளுக்கான நீர் தேவைகளுக்கு போதுமானதாக இருந்தது.

இந்நிலையில் 2015ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு பிறகு மாவட்டத்தில் மழை இல்லாததால் தற்போதைய கோடையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவானது. கடந்த மாதம் முதல் கடுமையான கோடை

வெப்பம் நிலவியது. கடந்த சில தினங்களாக வெப்பத்தின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவில் இருந்து மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

சில இடங்களில் கன மழையும், தொடர்ந்து அனைத்து இடங்களிலும் சாரல் மழையும் பெய்து வருகிறது. பகல் மற்றும் இரவு முழுவதும் மழை பெய்து கொண்டே இருந்தது. நேற்று அதிகபட்சமாக காரைக்குடியில் 63 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இளையான்குடியில் 59 மி.மீ, திருப்புத்தூரில் 56 மி.மீ, மானாமதுரையில் 40.4 மி.மீ, திருப்புவனத்தில் 30.4 மி.மீ, சிவகங்கையில் 20 மி.மீ மழை பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக தேவகோட்டையில் 11.3 மி.மீ மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 40மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதனால் குளங்கள், கண்மாய்களுக்கு ஓரளவிற்கு நீர் வர தொடங்கியுள்ளது.

கத்தரி வெயில் கொளுத்தும் கோடை காலத்தில் பகலிலும் பெய்துவரும் சாரல் மழை மற்றும் தொடர்மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து பொதுமக்கள் கூறியதாவது: இந்த ஆண்டு தொடங்கி இதுவரை மழை இல்லை. மழையே இல்லாமல் கோடை காலத்தில் கொளுத்தும் வெயிலால் கடுமையாக பாதிக்கப்பட்டதால் தற்போது பெய்து வரும் மழையால் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் குளத்து நீரே குடிநீராக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பெய்யும் மழையால் குளங்களுக்கு ஓரளவு நீர் வரத்து தொடங்கியுள்ளது. இதனால் குடிநீர், கால்நடைகளுக்கான நீர் தேவைகளுக்கு கோடை காலத்தை ஓரளவு சமாளிக்கலாம் என்றனர்.இந்நிலையில் வரும் 19ம் தேதி வரை சிவகங்கை மாவட்டத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் ஏற்பட்டுள்ள மழை நீடிக்கும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டள்ளது.

**தென் மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும்; அடுத்த 48 மணி நேரத்தில் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பு**

சென்னை, தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே நிலையில் நீடிக்கிறது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் அநேக இடங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) மழை பெய்யும் என்றும், அடுத்த 48 மணி நேரத்தில் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பு உள்ளது என்றும் வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

காற்றழுத்த தாழ்வு மண்டலம்

தென் மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி இருந்தது. அது வலுப்பெற்று தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாறியது. அது மேலும் தீவிரம் அடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி நாகப்பட்டினத்திற்கும் பாம்பனுக்கும் இடையே இன்று(செவ்வாய்க்கிழமை) காலை கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது கரையை இன்று கடக்கும் நிலை ஏற்படவில்லை.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:-

இலங்கை அருகே உருவான தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி நேற்று 8.30 மணி அளவில் இலங்கை அருகே மன்னார் வளைகுடா பகுதியில் நிலை கொண்டுள்ளது. அது நிலத்திலும் நீரிலும் இருப்பதால் இன்னும் தாழ்வு மண்டலமாக மாறவில்லை. தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே நிலையில் தான் நீடிக்கிறது. ஆனால் அது வடக்கு நோக்கி நகர்ந்து வருகிறது. தாழ்வு மண்டலமாக அடுத்த 48 மணி நேரத்தில்தான் மாறும். இதனால் இன்று(செவ்வாய்க்கிழமை) அது கரையை கடக்காது.

இன்று அநேக இடங்களில் மழை பெய்யும்

அதன் காரணமாக இன்று தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யும். வட மாவட்டங்களில் சில இடங்களில் மழை

பெய்யும். ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:-

10 செ.மீ. மழை

வேதாரண்யம் 10 செ.மீ., ராமேஸ்வரம் 9 செ.மீ., பாம்பன் 8 செ.மீ., நாகப்பட்டினம் 7 செ.மீ., காரைக்குடி, இளையான்குடி, திருப்பத்தூர், தொண்டி தலா 6 செ.மீ., காரைக்கால், பரமக்குடி தலா 5 செ.மீ., கமுதி, மானாமதுரை, ராமநாதபுரம் தலா 4 செ.மீ., திருவாடானை, அதிராம்பட்டினம், திருப்புவனம், திருச்சுழி, முதுகுளத்தூர், புதுக்கோட்டை, மணமேல்குடி, கோவிலங்குளம், விருதுநகர், ஆர்.எஸ்.மங்கலம் தலா 3 செ.மீ., அருப்புக்கோட்டை, திருவாரூர், துறையூர், கடலாடி, அறந்தாங்கி, ஸ்ரீவைகுண்டம், சிவகங்கை, முத்துப்பேட்டை, மதுரை, தூத்துக்குடி, மேலூர், நத்தம் தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் புயல் எச்சரிக்கை கூண்டு எண் 3 ஏற்றப்பட்டுள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### புதிய அரசாங்கத்தின் முக்கியமான வேலை




“உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாடினார் பாரதியார் அன்று. நாட்டில் 50 சதவீதத்துக்குமேல் உள்ள மக்களின் வாழ்வாதாரமாக திகழ்வது விவசாயம்தான். அதிலும் தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களின் வாழ்க்கைச்சக்கரம் சிக்கலின்றி சுழலவும், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவும் விவசாயம் தழைத்தோங்கினால்தான் முடியும். இந்தியாவில் மழை என்றால் வடகிழக்கு பருவமழையும், தென்மேற்கு பருவமழையும்தான் என்றாலும், தமிழக மக்களுக்கு தண்ணீர் தேவையைப் பூர்த்திசெய்வது அண்டை மாநிலங்களில் பெய்யும் தென்மேற்கு பருவமழைதான். தென்மேற்கு பருவமழைக்காலம் என்றால் அது ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரை பெய்யும் மழைதான். இந்த

மழை வழக்கமாக ஜூன் மாதம் முதல் தேதியில் கேரளாவில் தொடங்கி, அதன் எதிரொலியாக குற்றாலம் அருவிகளில் தண்ணீர் கொட்டோ கொட்டு என்று கொட்டும். அதன்பிறகுதான் இந்த மழை கர்நாடகா மாநிலத்தில் மழையை கொடுத்து, தமிழ்நாட்டுக்கும் தண்ணீர் வழங்கும். கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை தாக்கத்தினால் அணைகளெல்லாம் நிரம்பி கிருஷ்ணராஜசாகர் அணைக்கட்டில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர்தான் மேட்டூர் அணையை நிரப்பி, காவிரியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

வழக்கமாக மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12–ந் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும். காவிரி டெல்டா பகுதியில் குறுவைபயிர் என்றால் தென்மேற்கு பருவமழையை அனுசரித்தே சாகுபடி தொடங்கும். இன்று வைகாசி மாதம் 4–ந் தேதி. குறுவைபயிர் சாகுபடியை வைகாசி கடைசியில் அல்லது ஆனி மாதம் தொடக்கத்தில் தொடங்கினால்தான், 105 நாள் குறுவைபயிரை அறுவடைசெய்ய வசதியாக இருக்கும். குறுவைக்கு 90 நாட்கள் கண்டிப்பாக தண்ணீர் பாய்ச்சவேண்டும். கடைசி 15 நாட்களுக்கு மட்டும் தண்ணீர் தேவையில்லை. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை குறைந்தது ஒருவார காலம் தாமதமாகும் என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. கேரளாவுக்கு ஜூன் 1–ந் தேதிக்கு பதிலாக, 7–ந் தேதிதான் மழை பெய்யத்தொடங்கும் என்றும், இந்த கணிப்பில் 4 நாட்கள் கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோ இருக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை இந்தமுறை வழக்கத்தைவிட அதிகமாக, அதாவது 106 சதவீதம் பெய்யும் என்றாலும், தமிழ்நாட்டில் சற்று குறைவாக பெய்யலாம் என அறிவித்துள்ள நிலையில், அந்த குறைவான மழையும் தாமதமாகப்பெய்யும் என்பது சற்று கவலை அளிக்கிறது.

தாமதமான மழை கர்நாடகத்தில் பெய்து, அங்கிருந்து மேட்டூருக்கு தண்ணீர் வந்து, மேட்டூர் அணையை குறுவை சாகுபடிக்காக திறப்பது நிச்சயமாக தாமதமாகும். இப்போதே மேட்டூரில் 47 அடி தண்ணீர்தான் இருக்கிறது. 90 அடிக்குமேல் தண்ணீர் நிரம்பினால்தான் தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட முடியும். இப்போது தமிழ்நாட்டில் பெய்யும் மழை

தீவிர பருவமழை அல்ல. திடீரென்று வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுபகுதி காரணமாக பெய்யும் மழைதான். இதை நம்பி விவசாயத்தைத் தொடங்கமுடியாது. எனவே, புதிய அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிப்பதற்கு இணையாக, தென்மேற்கு பருவமழை தாமதத்தின் காரணமாக ஏற்படும் நிலையை பரிசீலித்து, அந்த மழை வரும்வரை நிலத்தடிநீரை பயன்படுத்துவதற்கு வசதியான ஏற்பாடுகளையும், வந்தபிறகு நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுக்கவேண்டும். எந்தெந்த பகுதிகளில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கும்?, அதை பயன்படுத்தி எந்தெந்த வகையான பயிர்களை சாகுபடிசெய்யலாம்? எனவும் முடிவெடுத்து, விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை மூலமாக விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் அசுரவேகத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். கங்கையையும், தாமிரபரணியையும் இணைக்கும் திட்டத்தை லட்சியமாகவும், முதல்கட்டமாக தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் பணிகளையும் புதிய அரசு செய்யவேண்டும்.

**குமரி மாவட்டத்தில் கோடைமழை தொடர்வதால் பொதுமக்கள் மகிழ்ச்சி சூறைக்காற்றில் வாழைகள் சாய்ந்தன**



குமரி மாவட்டத்தில் கோடைமழை தொடர்வதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சூறைக்காற்றில் ஏராளமான வாழைகள் சாய்ந்தன.

கோடை மழை

குமரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக கோடை வெயில் வாட்டி வதைத்தது. இந்தநிலையில் அக்னி நட்சத்திரம் தொடங்கியதால் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரித்தது. இதனால், மழை பெய்யாதா? என அனைவரும் ஏங்கி தவித்தனர்.

இந்தநிலையில், தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் அறிவித்தது. அதன்படி, குமரி மாவட்டத்தில் கடந்த ஓரிரு தினங்களாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு தக்கலை, முளகுமூடு, இரணியல், வில்லுக்குறி போன்ற பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இதனால், பல இடங்களில் சாலையின் குறுக்கே மரங்கள் முறிந்து விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

முளகுமூடு அருகே காடுவெட்டியில் சாலையோரம் நின்ற மரம் முறிந்து சாலையின் குறுக்கே விழுந்தது. இதனால், அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும், மரம் முறிந்து விழுந்ததால் மின்கம்பம் முறிந்து அந்த பகுதியில் மின்தடை ஏற்பட்டது. இதுபோல், இரணியல் கண்டன்விளையில் சாலையின் குறுக்கே மரம் முறிந்து விழுந்தது. இரணியல் தொடக்கப்பள்ளி அருகே நின்ற ஒரு மரம் முறிந்து சாலையின் மீது விழுந்தது. இந்த மரங்களை அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

வாழைகள் சாய்ந்தன

தக்கலை அருகே ஆழ்வார் கோவிலில் நேற்று முன்தினம் இரவு கனமழையுடன் பலத்த சூறை காற்று வீசியது. இதில் ஏராளமான வாழைகள் சாய்ந்தன. இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். திற்பரப்பு பகுதியில் பெய்த மழையால் அருவியில் தற்போது மிதமான தண்ணீர் பாய்கிறது. நேற்று கொல்லங்கோடு, குலசேகரம், மார்த்தாண்டம், திருவட்டார், களியக்காவிளை போன்ற பகுதிகளில் நேற்று காலை முதல் லேசான சாரல் மழை பெய்தது.

குமரி மாவட்டத்தில் நேற்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

இரணியலில் அதிகம்

பேச்சிப்பாறை–1.8, பெருஞ்சாணி–17.2, சிற்றார் (1) – 10.4, சிற்றார் (2) – 11.6, மாம்பழத்துறையாறு–20, நாகர்கோவில்–22.2, பூதப்பாண்டி–3, சுருளோடு–18, கன்னிமார்–2.2, மயிலாடி–7.2, கொட்டாரம்–2.4, இரணியல்–52, ஆணைக்கிடங்கு–22, குளச்சல்–24, குருந்தன்கோடு–20.2, அடையாமடை–38, முள்ளங்கினாவிளை–3, புத்தன்அணை–16.4, திற்பரப்பு–24.8.

மாவட்டத்தில் அதிகபட்சமாக இரணியல் பகுதியில் 52 மில்லி மீட்டர்

மழை பதிவாகியுள்ளது. கோடைமழை தொடர்ந்து பெய்வதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்வு



பரமத்தி வேலூர்,

பரமத்தி வேலூர் வெற்றிலை ஏல சந்தையில் வெற்றிலையின் விலை உயர்வு அடைந்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>வெற்றிலை பயிரீடு</u>

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது. இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகா, கேரளா, குஜராத், மராட்டியம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த பகுதியில் வாரத்தில் சனிக்கிழமை தவிர்த்து மற்ற 6 நாட்களும் வெற்றிலை ஏல சந்தை நடைபெறுவது வழக்கம். வேலூரில் மட்டும் 10–க்கும் மேற்பட்ட வெற்றிலை ஏல சந்தைகள் உள்ளன. இந்த ஏல சந்தைகளில் கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை இளம்பயிர் மார் 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.6 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்திற்கும் போனது.

விலை உயர்வு

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை இளம்பயிர் மார் 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.8 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்துக்கும் ஏலம் போனது.

சமீபத்தில் இந்த பகுதியில் பெய்த மழையின் காரணமாக வெற்றிலை உற்பத்தி குறைந்து உள்ளது. மேலும் வெள்ளைக்கொடி முதியம்பயிர், கற்பூரி முதியம்பயிர் ஆகிய வெற்றிலைகள் ஏலத்திற்கு வரவில்லை. இதன் காரணமாக வெற்றிலையின் விலை உயர்வு அடைந்து உள்ளதாக வெற்றிலை பயிரிட்டு இருந்த விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.